# P 5 - மாதிரி கட்டுரை & பயிற்சி வினா

## பொருளடக்கம்


| தொகுதி | படக் கட்டுரை / பயிற்சி வினா — இடம் | மாதிரிக் கட்டுரை / படக் கட்டுரை — கருப்பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | வீடு | பொறுப்பற்ற செயல் | 1 - 6 |
| 2 | நடன வகுப்பு | தன்னம்பிக்கை | 7 - 12 |
| 3 | வகுப்பறை | நட்பு | 13 - 18 |
| 4 | பேரங்காடி | சினம் காத்தல் | 19 - 24 |
| 5 | படிப்பு அறை | தந்தையின் அன்பு | 25 - 30 |
| 6 | சமூக ஊடகம் | ஊக்கம் | 31 - 36 |
| 7 | வீட்டுக் கீழ்ப்புறம் | உயிரினங்களை நேசித்தல் | 37 - 42 |
| 8 | பனிக்கூழ் கடை | பேராசை | 43 - 48 |
| 9 | சமையலறை | கவனக்குறைவு | 49 - 54 |
| 10 | புகைப்பட வகுப்பு | ஆர்வம் | 55 - 60 |
| 11 | சாலையோரம் | பிறருக்கு உதவுதல் | 61 - 65 |
| 12 | பள்ளி திடல் | உடல் ஆரோக்கியம் | 66 - 70 |
| 13 | பெருவிரைவு ரயில் நிலையம் | விழிப்புணர்வு | 71 - 76 |
| 14 | அண்டை வீடு | உதவும் குணம் | 77 - 82 |
| 15 | நீச்சல் குளம் | பெற்றோரின் ஊக்கம் | 83 - 88 |
| 16 | விளையாட்டு மைதானம் | பரிவு | 89 - 94 |
| 17 | பேருந்து நிலையம் | நாசவேலை | 95 - 100 |
| 18 | மருத்துவமனை | விடாமுயற்சி | 101 - 106 |
| 19 | நூலகம் | நேர்மை | 107 - 112 |
| 20 | கடைத்தொகுதி | தாயின் அன்பு | 113 - 118 |



NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE

## மாதிரிக் கட்டுரை

# நான் செய்த பொறுப்பற்ற செயல்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை நீ இந்த கட்டுரை எழுதுவதற்கு உதவியாக பயன்படுத்திக்கொள்ளலாம்.

- எப்பொழுது அந்த பொறுப்பற்ற செயல் நடந்தது?
- எப்படி அந்த பொறுப்பற்ற செயலில் ஈடுப்பட்டாய்?
- ஏன் அவ்வாறு பொறுபற்று நீ நடந்து கொண்டாய்?
- அந்த சம்பவத்திலிருந்து நீ கற்றுக் கொண்ட பாடம் என்ன?

"வணக்கம் நண்பா! 1. **காற்று இதமாக வீசுகிறது, சூரியனும் மங்கலாகத் திகழ்கிறான்**. 2. **மிதிவண்டி ஓட்டுவதற்கு பொருத்தமான நாள்; என்ன சொல்கிறாய் ?** என்று கூறிய பாலு தன் 3.**ஆருயிர் தோழன்** மணியின் வீட்டு வாசலில் நின்றான். மணிக்கு பாலுவின் யோசனை பிடித்திருந்தது. 4.**உடலும் உயிரும் போல் ஒற்றுமையாகத் திகழ்ந்த** இருவரும் தத்தம் மிதிவண்டிகளின் மீது ஏறி புறப்பட்டார்கள்.

இணைபிரியா தோழர்கள் புதுப்பூங்காவிற்குச் செல்ல திட்டம் தீட்டினார்கள். ஆனால், பூங்காவை அடைந்தபோதுதான் அதில் மிதிவண்டி ஓட்டக்கூடாது என்ற எச்சரிக்கை பலகை இருப்பதை அறிந்தனர். ஏமாற்றம் அடைந்த மணி சோகம் தோய்ந்த முகத்துடன் பாலுவை நோக்கினான். பாலுவும் அவனுக்கு ஆறுதல் கூறி வேறு எங்கேயாவது மிதிவண்டி ஓட்டி களிக்கலாம் என்று யோசனை கூறினான்.

1. வருணை - Creative Description
2. உரையாடல் - Dialog
3. சொற்களஞ்சியம் - Catchy Words
4. இனிய தொடர் - Good Phrase

மணியின் முகத்தில் உடனே 1. **புன்னகை பூத்தது.** அவன் சாலையில் மிதிவண்டி ஓட்டப்போவதாக கூறி அப்படியே செய்ய ஆரம்பித்தான். " சாலையில் வாகனம் எதுவும் இல்லை; ஆனாலும் பாலுவுக்குத் தன் தோழனின் செயல் தவறு என்று தோன்றியது. 2. **அவன் உடனே வேண்டாம் மணி! சாலையில் விளையாடுவது நமக்கும் ஆபத்து, நம்மைச் சுற்றி இருப்போருக்கும் ஆபத்து ! " என்று மணியை எச்சரித்தான்**. அவன் சொற்கள், 3. **செவிடன்**

NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE

**காதில் ஊதிய சங்கைப் போல் பயன் இல்லாமல் போயின**. மணி திரும்பி பார்த்து அவனை நிறுத்த முயன்ற பாலுவின் கோழைத்தனத்தைக் கேலி செய்யத் தொடங்கினான். அத்தருணம் , 4. **" ஆஆஆஆஆ! " என்று வானத்தைப் பிளக்கும் சத்தம் ஒலித்தது**.

1. சொற்களஞ்சியம் - Catchy Words
2. உரையாடல் - Dialog
3. உவமைத்தொடர் - Metaphor
4. ஒலிக்குறிப்பு - Expression phrase

மணி அதிர்ச்சியில் 1. **ஆடாமல் அசையாமல்**, திகைத்து நின்றான். அவன் ஒரு வயதான மூதாட்டியை இடித்து தள்ளிவிட்டதை உணர்ந்தான். அவர் துடித்துக்கொண்டிருந்தார்; அவரின் பையில் இருந்த பழங்கள் கீழே இரைந்து கிடந்தன. மூதாட்டி வலியால் தவித்துக் கொண்டிருந்ததைக் கண்ட பாலு ஓடிச் சென்று அவருக்கு உதவ முயன்றான். ஆனால் மூதாட்டியாலோ வலியைத் தாங்கிக் கொண்டு எழுந்திருக்க இயலவில்லை. திடீரென்று அவர் மயங்கி விழுந்தார். அச்சமயம்வரை பயத்தில் சிலைபோல் நின்றுகொண்டிருந்த மணி, உடனே தன் கைத்தொலைப்பேசியை வெளியே எடுத்து மருத்துவ வண்டியை அழைத்தான்.

2.**கண் இமைக்கும்** நேரத்தில், மருத்துவ வண்டி வந்தது. மருத்துவ அதிகாரிகள் மூதாட்டியை வண்டியில் ஏற்றிக்கொண்டு காற்றின் வேகத்தில் புறப்பட்டார்கள். மருத்துவ வண்டியுடன் ஒரு காவல் வண்டியும் வந்திருந்தது. அதிலிருந்த அதிகாரி ஒருவர் நண்பர்களை விசாரித்து சில குறிப்புகளை எடுத்துக் கொண்டார். அவர் சினம் கொண்ட குரலில் மூதாட்டியை இடித்தது யார் என்று கேட்டபோது, பாலு தன் நண்பனைக் காட்டிக்கொடுக்கவில்லை. அதிகாரி இருவரையும் கடுமையாக திட்டினார். தங்களது தவற்றை எண்ணி வெட்கத்தில் இருவரும் தலைக்குனிந்தார்கள். மணி தான் செய்த தவற்றை நினைத்து வருந்தினான். அதிகாரி சாலையில் விளையாடுவதனால் ஏற்படும் ஆபத்தை எடுத்துக் கூறி புறப்பட்டார். 3. " **அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்**" என்ற பழமொழியின் அர்த்தத்தை உணர்ந்த மணியின் 4. **கண்கள் கண்ணீரில் மிதந்தது**.

1,2,4 - சொற்களஞ்சியம் - **Catchy Words**
3. பழமொழி - **Palamozhli**

அவன் பாலுவிடம் மன்னிப்பு கேட்டு தன் பொறுப்பற்ற செயலை மறுபடியும் செய்ய போவதில்லை என்று 1. உத்திரவாதம் கொடுத்தான். தன் தவற்றை உணர்ந்த நண்பனை மன்னித்து அவன் நல்ல எண்ணங்களை நினைத்து பெருமை கொண்டான் பாலு. அதன்பின், நண்பர்கள் இருவரும் மூதாட்டியைச் சந்திக்க மருத்துவமனைக்குப் புறப்பட்டார்கள். இருவரும் அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டனர்.

NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE

2 "**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயஞ் செய்து விடல்"**

3. **என்பதற்கு ஏற்ப** மூதாட்டியும் மணி செய்தப் பொறுப்பற்ற செயலைப் பெருமனதுடன் மறந்து மன்னித்த அந்த மூதாட்டியின் நற்செயலைக் கண்டு மணியும் பாலுவும் புரிப்பு அடைந்தனர். அவர்களுக்கு மூதாட்டி நல்ல எடுத்துகாட்டாக விளங்கினார்.

1. சொற்களஞ்சியம் - Catchy Words
2. திருக்குறள் - Thirukural
3. இணைக்கும் வாக்கியம் - Connecting words

## அருச்சொற்கள்

**மங்கலாகத்** - தெளிவில்லாத (Dimly)

**தத்தம்** - அவரவர் (According to one's)

**களிக்கலாம்** - மகிழலாம் (Enjoy)

**புன்னகை** - சிரிப்பு (Smile)

**அத்தருணம்** - அந்நேரம் (On that time)

**கோழைதணம்** - எதற்கும் பயம் கொள்பவன் (Timid person)

**இரைந்து** - சிதறி (Scattered)

**கடுமையாக** - மிகவும் பயங்கரமாக (Strictly)

**உத்திரவாதம்** - உறுதி (Assurance)

**இன்னாசெய் தாரை** - தீமை செய்தவர் (Harmful)


NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE

## பயிற்சி வினா

**தொகுதி: 1** **கருப்பொருள்:** பொறுப்பற்ற செயல்

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிக் குறிப்புகளையும் மனவரைபடத்தையும் இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| கேலிச்சித்திரம் | தண்ணீர் கொதித்தது |
| உணவுச்சண்டை | அடுப்பு |
| கந்தல் துணி | கவனிக்கத் தவறினர் |
| பதற்றத்துடன் | தீப்பற்றியது |

NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE


## ***உதவிக் குறிப்புகள்***

- நீண்ட பள்ளி விடுமுறை எங்களைச் சுதந்திர பறவைகளாக மாற்றியது.
- பெற்றோர்கள் வேலைக்குச் சென்றனர்
- வீட்டுப்பாடங்களை முடித்து கேலிச்சித்திரம் பார்த்தோம்
- மும்முரமாக விளையாட்டில் ஈடுப்பட்டோம்
- தேநீர் குடிக்க நினைத்தோம்
- அடுப்பில் வெந்நீர் சுட வைத்தோம்
- கவனத்தைச் சிதறவிட்டு உணவு சண்டை போட்டோம்
- கவனக் குறைவு
- காரியத்தில் கண்ணாய் இரு
- அடுப்பு வெடித்துத் தீப்பற்றி எரிந்தது.
- தண்ணீர் சிதறியது
- பதற்றமடைந்தோம்
- காயம் ஏற்பட்டது
- வெட்கி தலை குனிந்தோம்

NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE

***மன வரைபடம்***




NO PHOTOCOPY / REPRODUCE / NOT FOR CIRCULATION

COPY RIGHTS RESERVED BY WORDSMITH - SIGARAM TAMIL COACHING CENTRE